


601
0372
0372
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேள்வி

கவிஞர் - இரும்பொறை

-P.F.L.T-

பிரச்சார வெளியீட்டு வாரியம்
விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

தமிழகத்துக் கவிஞர் இரும்பொறை அவர்கள் தமிழீழத்தில் நின்றபோது லெப். கேணல் திலீபனின் 3ம் ஆண்டு நினைவு நாளுக்காய் எழுதிய கவிதை இது.

இந்தக் கவிதை எழுதப்பட்டபோது யாழ். கோட்டையில் பெரும்போர் நடைபெற்று வந்தது.

தமிழீழப் போராட்டத்தின் ஒரு காலத்தை வெகு அழகாக, இக் கவிதை படம்பிடித்துக் காட்டுகின்றது. உணவுத் தடை, எரிபொருட் தடை, உற்பத்தித் தடை என தமிழீழத்தின் மீது சிங்கள அரசு பூரண பொருளாதாரத் தடையை விதித்திருக்கின்றது.

அதேவேளை தமிழீழ மக்கள் மீது பாரிய குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடாத்தி வந்தது.

பாரிய அழிவுகள் மூலமும், பூரண பொருளாதாரத் தடைகள் மூலமும் தமிழீழத்தை அடி பணிய வைக்கலாம் என சிறீலங்கா எண்ணிய காலம்.

தமிழீழ மக்களே தமது பலத்தையும், வளத்தையும் முற்றாக நம்பாத காலம்.

அந்தக் காலகட்டத்தில் தான் இக் கவிதை எழுதப்பட்டது. தமிழீழப் போராட்ட வரலாற்றை சுருக்கமாகக் கூறும் இக் கவிதை தமிழீழ மக்களுக்கு அவர்களது பலத்தையும், வளத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. ஆண்டாண்டு கால அடிமை வாழ்வை மறந்து, யாரையும் எதிர்பாராமல், சுயமாக வாழ வழிகாட்டுகின்றது.

உதாரணமாக, பனை மரம் எவ்வளவு வளத்தைத் தரும் என்பதை இக் கவிதையில் வருவது போல யாரும் சிறப்பாகச் சொன்னது கிடையாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனையை நம்புங்கள் உங்கள் மண்ணை நேசியுங்கள்.

குரோட்டனைவிட்டு குரக்கனைப் பயிரிடுங்கள். நடைபெறும் தியாக வேள்வியிலே உங்களது பயத்தை, அவநம்பிக்கையை அழியுங்கள்.

தமிழீழத்திற்கான வேள்வியை யாரும் தடுத்து விட முடியாது.

எல்லோரும் வாருங்கள்; எதிரி அழிக்கப்படுவான்... என அறைகூவி நிற்கின்றது இக் கவிதை.

முச்சங்கம் வைத்து
முத்தமிழ் வளர்த்து
அகம் - புறம் கண்டது
மும்முடி கொண்டது
எல்லாம் முந்தைய வரலாறு

சிங்களம், கேரளம்
கன்னடம், தெலுங்கம்
துழுவம் என்றே
நிலத்தையும், இனத்தையும்
இழந்த கதையே
பிந்தைய வரலாறு

கொண்டச்சி, கொக்காவில்
கோட்டை,
என
சிங்களப் படைமுகாம்
தகர்த்து
தமிழன் எழுந்து நிற்பது
இன்றைய வரலாறு.

**26-09-1990**

**தமிழீழம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்வி

இந்துமாக் கடலில் இருந்த
குமரிக் கண்டம்தான்
தமிழ்க் குடியின் பிறந்த வீடாம்.

கடல் கொண்ட நிலத்தில்
உயிர் தப்பி மீந்து
கரை சேர்ந்த தமிழன்
நாவலந் தேயத்தில், இலங்கைத்தீவில்
வாழ்ந்த கதையும்
பற்பல நாடுகள் ஆண்டகதையும்,

முச்சங்கம் வைத்தது
முத்தமிழ் வளர்த்தது
அகம் புறம் கண்டது
மும்முடி கொண்டது
எல்லாம் முந்தைய வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம், கேரளம்
கன்னடம், தெலுங்கம்
துளுவம் என்றே
நிலத்தையும் இனத்தையும்
இழந்த கதையே
பிந்தைய வரலாறு.

இடை இடை சிலபேர்
எடுத்து நிறுத்த எத்தனித்தார்கள்.

இன்று
மீந்தது எல்லாம்
தமிழீழம் என்றொரு தேசம்
தமிழகம் என்றொரு நாடு

தமிழனின்
நிலத்திலும், இனத்திலும்
நேற்று வரையிலும் விடியாத இரவுதான்
இழிவும் — அடிமையும்
துன்பமும் — துயரமும் அவனது உறவுதான்,

இன்று தான்
இங்குதான் இவனது வானத்தில்
ஒரு விடிவெள்ளி முளைத்தது
தமிழனின் உள்ளத்தில்
ஒரு நம்பிக்கை தழைத்தது.

பிரபாகரன்
என்றொரு மானுடன் பிறப்பும்
தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற
அவனது வளர்ப்பும்
இருண்ட எம் வாழ்வில்
எழுகின்ற செங்கதிர்;
தமிழனின் வரலாற்றின்
தலை நிமிர்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான மீட்பின்
மணியடிப்பு.
உரிமை காக்க
ஊதும் சங்கொலிப்பு.
கட்டிய கைகளின்
விலங்குடைப்பு.

புலிகள் —
தமிழினத்தின் விழிகள்!
அடிமை இருளில்
உழன்ற எமக்கு
இவர்களே வழிகள்.

பூவெல்லாம் பிஞ்சாக
பிஞ்செல்லாம் காயாக
காயெல்லாம் கனியாக
கனியெல்லாம் உணவாக
ஆவதில்லை.
இப்படித்தான்
எங்களின் மண்ணில்,
எழுந்த இயக்கங்கள்.
மக்களின் வாழ்வில்
விளக்கேற்ற வந்தவர்
தங்களின் வாழ்வைத்
தழைத்திடச் செய்யவும்,
பரம்பரைக் கெல்லாம்
சொத்துச் சேர்க்கவும்
மக்களின் வாழ்வை விற்பனை செய்து
மடியை நிரப்பினர்
மனைவியின் மீது பொன்னகை பரப்பினர்.
உரிமையை
ஆயுதம் தூக்கி அடித்துப் பறிப்பதாய்
அச்சில் எழுதியும்
வாய்கிழியப் பேசியும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டம் போட்டவர்,
சீமைச் சாராயத்திற்கும்
எலும்புத் துண்டிற்கும்
எழமுடியாமல் விழுந்தார்.
தாய்மண் மீட்டிட
உரிமையை நாட்டிட
படையை அமைத்தவர்
எதிரிக்கு காட்டிக் கொடுத்திட,
தலையை ஆட்டிடலானார்
பெருமாள் மாடுகளானார்.

தமிழீழம் பிடிக்க
தனிநாட்டை அமைக்க
ஆயுதம் எடுத்தவர்
தம்மக்கள் சாகும் போது,
அடுத்த நாட்டுக்குத்
தடிகொண்டு போனார்
அடியாட்களாய் ஆனார்.

இவரெல்லாம்
எதிரிக்கு விலையாகிப்போம் போது
புலிகள் ...
விடுதலைக்கு விதையாகிப் போனார்கள்.

செந்நீர் கொட்டி வளர்த்த
விடுதலைப் பயிரை
o இரண்டக ஆடுகள்
பெருமாள் மாடுகள்
எட்டிமேய்ந்திட நினைத்திட்ட போது
புலிகளின் எலும்புகள்
வேலியாய் நின்றன.

உலகத்தின்
விடுதலை வரலாற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேள்வி

புலிகளின் ஏடு
வியப்புக்குறியில்தான் தொடங்குகிறது.

சிங்களத்தின் காடையரும் முப்படையும்
மூச்சுவிடும் நேரத்தில் முடங்கிப் போனதும்
அடுத்து போர்க் கருவிகள்
அடங்கிப் போனதும்
கருப்புக் கமாண்டோக்கள்,
இங்கிலாந்துச் சின்மினிகள்......
இஸ்ரேல் மொசாத்துக்கள்......
மூச்சுவிட ஆசைப்பட்டு ஓடிப்போனதும்

மில்லர் எனுமொரு எரிமலை
சிங்கள முகாமுக்குக்
கொள்ளி வைத்ததும்
விடுதலை வரலாற்றில்
வியப்புக் குறிகளாகத்தான் நிற்கிறது.

கடைசியில்
மதிகெட்டு மானமும் கெட்டு
பக்கத்து வீட்டுப் பாரதத்திடம்
பல்லிளித்தது சிங்களம்

அப்பம் சாப்பிட
ஆசைப்பட்ட குரங்கும்
ஆயுதத்தில் அரிசி வைத்துப்
பயணம் வந்தது

கொலைவெறி நாடகம் நடத்த
கொல்லைப் புறமாய் வந்த இந்தியா
இருபதாம் நூற்றாண்டில்
தன்இழிந்த வரலாற்றைப்
புதுப்பித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதப் பண்பாடு
காந்தியக் கலாச்சாரம் ...?
முகமூடி கிழிந்து அம்மணமாகி
உலக அரங்கில்
உமிழ்நீர் ஏற்றது.

அமைதி, அன்பு
எனுமிரு சொல்லையும் அசிங்கப்படுத்தி
அவமானப்பட்டது.

ஆப்பிழுத்த குரங்காம்
வல்லரசு இந்தியா
'அப்பாடா' போதுமென்று
வந்தவழி பார்த்தது.

''மாகாணசபை'' என்னும்
மண்ணாங்கட்டியையே
மாளிகையாம் என்றவர்கள்
மக்களையே கொன்றவர்கள்
கிடைத்ததைச் சுருட்டி
ஒரிசாவுக்கு ஓடிப்போனார்கள்.

''திலீபன்'' என்னும் தியாக சீலன்
காந்தி தேசத்தின் வேடம் கலைத்து
முதல் பாடம் புகட்டினான்

குமரப்பா, புலேந்திரன்
பன்னிரு வேங்கைகள்
நஞ்சைக் கடித்துக்
கொடுத்த சாட்டையடி
மூன்றாம் காந்தியின்
மூக்கை அறுத்தது.
ஜொனியின் கைகள்
முகத்தில் கரியைப்பூசின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேள்வி

விடுதலை வேண்டி
வெளிக்கிட்ட மக்கள் முன்
வல்லரசெல்லாம்....
வலிமை இழக்கும்,
வரலாற்றில் இதுதான்
மாறாத வழமை

தமிழீழ மக்களும் புலிகளும்,
இனத்தின் ஒ ஈகமும், வீரமும்
பெருமையை மீண்டும்
எடுத்துக் காட்டினர்
விடுதலை வரலாற்றை
மீண்டும் உலகில் வெளிச்சப்படுத்தினர்.

இரண்டரை ஆண்டுகள்
இளைப்பாறிய சிங்களவன்
இதோ......
எழுந்துவருகின்றான்.

தமிழின—
குருதியைக் குடிக்க
நீண்டு தொங்கும் நாக்கு
தசையைக் கிழிக்க
கூரிய கோரைப் பற்கள்
கொலைவெறிக் கைகள்
கொடிய முகத்தில் கொள்ளிக் கண்கள்
இதோ......
இனவெறிச் சிங்களவன்
எழுந்து வருகின்றான்.

விடுதலை! விடுதலை! விடுதலை! என்றே
எத்தனை மக்கள் உயிர்களை விட்டனர்!
எத்தனை புலிகள் உயிர்களை நட்டனர்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழலுக்கா இறைத்தோம்
எங்களின் உயிர்களை?
வீணுக்கா புதைத்தோம்?
புலிகளின் உடல்களை......
இல்லை;
விடுதலைப் பயிருக்குப் புதைத்தோம்
இனத்தின் விடிவுக்கே இறைத்தோம்.

இழந்த இறைமையை
மீட்பது அன்றி;
இழப்பதற்கு எம்மிடம்
எதுவுமே இல்லை.

வெற்றியின் விளிம்பில்
வீரராய்ச் சாகாமல்,
அந்நிய மண்ணில்
அகதியாய்ச் சாவோமா?

விடுதலையை வெல்லாமல்
இனிஇங்கே
வேறு ஒன்றும் வேலை இல்லை.

அசைவதுவும் இயங்குவதும் விடுதலைக்கே!
உண்ணுவதும் உறங்குவதும் விடுதலைக்கே!
ஓடுவதும் உழைப்பதுவும் விடுதலைக்கே!
வாழ்வதுவும் சாவதுவும் விடுதலைக்கே!

கள்ளமனச் சிங்களவன்
குண்டுமழை பொழியட்டும்,
கொள்கையிலே மாற்றமில்லை!
பாவிமகன் அரசாங்கம்
பட்டினியே போடட்டும்,
விடுதலைப் பாதையிலே தடங்கலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலத் தமிழன் போல்
அடிமைப் பிறவியாய்,
செல்லரித்துச் சாவதிலும்
விடுதலைப் போரில்
செல்லடித்துச் சாவதுமேல்.

பாட்டனைப் போல் இல்லாமல்
புதைகுழிக்குப் போகுமுன்னே
பகைவன் மேல் பாய்வதற்கு,
பதுங்குழிகளுக்குள்ளே நாம் வாழ்வோம்
தாய்மண்ணை நாம் ஆள்வோம்.

விசர்பிடித்த சிங்களவன்
விடுதலையைத் தடைப்படுத்த
பொருளுக்குத் தடைவிதித்தான்
சீப்பை மறைத்து விட்டால்
திருமணம் நின்று போமா?
அகப்பையை அகற்றி விட்டால்
பசிவயிறு அடங்கிப் போமா?

சிங்கள அரசு செய்யும்
பொருளாதாரத் தடையெல்லாம்

பொங்கிவரும் பூகம்ப உணர்வுகளைத்
தடுத்திடுமா?

சொத்தும் சுகமும்
சொகுசான வாழ்வும்
செத்த பின்பும் வந்திடுமா?

வித்துகின்ற விடுதலைக்கு
கொட்டுகின்ற குருதியெல்லாம்,
விடிகின்ற வானத்தில்
செந்நிறமாய் விரவி நிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்காக
விடுகின்ற இறுதி மூச்சு
கொண்டலிலே, தென்றலிலே
சோழகத்தில் சுற்றிவந்து
காலமெல்லாம் நிறைந்திருக்கும்

விடுதலைக்காய் விழுகின்ற
உடலெல்லாம் உரமாகி
நிணமெல்லாம் நீர்பாய்ச்சி
நெடுங்காலம் பயிர்வளர்க்கும்

வாருங்கள்......!
விடுதலைக்கு வடம்பிடிப்போம்
வரலாற்றில் இடம்பிடிப்போம்.

நாகரிகப் பொருளையெல்லாம்
நாடாமல் விட்டுவிட்டால்
நாளை
நாடுநமதாகும்

தேவைகளைக் குறைப்பதிலே
தேசத்தின் விடுதலைக்கு
உதவி செய்வோம்.

புலியெல்லாம்
போர்க்களத்தில் சாகும்போது
பொழுது போக்குத் தேவைதானா?

இளைஞர்களே!
இளமையென்ன இருவர் கை
கோர்த்தபடி திரிவதற்கா?
வாழ்க்கையென்ன
வரலாற்றில் இழிவுகளைச் சுமப்பதற்கா?
ஈழவிடுதலைப் புலிப்படையில் இணையுங்கள்
தமிழீழமண்ணை இரத்தத்தால் நனையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேள்வி

விடுதலையை விற்பதற்கு
நாங்களென்ன மற்றவர்போல்
விசரன்களா?
பட்டினி போடுவதால்
படை முடங்கிப் போய்விடுமா?

எங்கள் திலீபனின்
விடுதலைப்பசி தீர்க்காமல்
வயிற்றுப் பசிக்கு
வாயேந்தி நிற்போமா?

வெள்ளைச் சீனிக்கும்
மாவுக்கும் பாலுக்கும்,
நாடாளப் போர் தொடுத்த நாங்கள்
நாயிடமா பிச்சை கேட்போம்?

தமிழீழ மண்ணில்
தரிசின்றி பயிர் செய்தால்
பலநாட்டின் பசியடங்கும்.

வயல்வரம்பில், பதுங்குகுழி
தோள்இடுக்கில் துவக்கொன்று
விடுதலைப் போர் தொடர
வழி இதுதான்.

கடலெல்லாம் கயல் துள்ளும்
கடும்பசியை அது வெல்லும்
இடுப்பில் இரண்டு எறிகுண்டு,
எறிவலியுங்கள் துடுப்பை
இதுதான் விடுதலைப் படகு.

பனைமரமா?
அது, பலசரக்குக் கடையன்றோ?
எரிகின்ற விறகிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஃகுபோல் மரமிருக்கும்
எறிகணையை அது எதிர்க்கும்

ஓலை மட்டையிலே
குளிரான வீடிருக்கும்
படுத்துறங்கப் பாயிருக்கும்;
அழகான பொருளெல்லாம்
அதனுள்ளே மறைந்திருக்கும்.

பனங்கட்டி பனஞ்சீனி
பனாட்டோடு பணியாரம் இனித்திருக்கும்.
பனம் பழமோ வயிர் நிறைக்கும்.
கொட்டையிலே கிழங்கிருக்கும்
மாவிடித்தால்;
ஒடியல் கூழ் புட்டெல்லாம் மணத்திருக்கும்.
எத்தனைதான் இருந்தாலும்
அதிலிருக்கும் பன்னாடை தானெடுத்து
நல்லதெல்லாம் வடிகட்டி
கழிசடையாம் கள்ளை மட்டும்
குடித்திருக்கும் மனிதர்களே
மாறுங்கள்! மாறுங்கள்!
விடுதலைக்கே வாருங்கள்

முழு நாளும்
மொந்தையிலே முழுகிவிட்டு
போதையிலே திரிகின்ற மனிதர்களே!
விடுதலைப் பாதையிலே வாருங்கள்.

இனவெறியன் இந்நாட்டில்
பெரும் சண்டை நடத்துகையில்
மதுவெறியில் மனைவிமீது
மடச்சண்டை நடத்துகின்ற
மாவீர மனிதர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் சிறிது
கோட்டையிலே காட்டிவிட்டால்......
சிங்களவன் இந்நேரம்
நாட்டை விட்டுப் போயிருக்க மாட்டானா?
திருந்துங்கள், திருநாட்டை மீட்டெடுங்கள்

போராட்டக் களமெல்லாம்
புதுக்கல்வி கற்கும் தலமாகும்.
மரத்து நிழல்,
தெருத் திண்ணை,
படிக்கும் இடமானால்,
எதிர்காலச் சந்ததியும்
திடமாக மாறும்.

கொழும்பு தந்திடும் பால்மா
எங்கள் குரக்கன் மாவிலும் மட்டந்தான்.
பாட்டியின் பச்சிலை
பாதகமில்லா மருத்துவமாம்.
பழமையைப் போக்கி
புதுமையைப் புகுத்தி
விழுப்புண் மாறவும் செய்வோம்.

பதுங்குகுழி இல்லா
கோயிலும் வீடும் பாழ்.
''கோழி இல்லா வீட்டில்
குடியிருக்க வேண்டாம்''
புதுமொழி படையுங்கள்.

பிள்ளையாருக்கு ஊற்றும் தண்ணீர்
பின்பக்கம்
வாழைக்குப் பாய்ந்திட வழி செய்வோம்.

நமது பிள்ளைகள் மட்டுமா?
அம்மா என்று அழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் வளர்த்தால்
ஆடும், மாடும்
அப்படித்தான் அழைக்கும்.

வாசலிலே இருக்கின்ற
பூந்தொட்டி எல்லாம்
கத்தரிக்காய் வெண்டைக்காய்
காய்க்குமென்றால் ...
கணவன் மனைவி சண்டை கொஞ்சம்
குறையுமன்றோ?

சினிமா கிறுக்கியைப் போல்
பல்லிளிக்கும் குரோட்டன்சால்
பயனென்ன?
வேரோடு பிடுங்கி விட்டு
வத்தாளங் கொடி வைத்தால்
பச்சிளம் பிள்ளைக்குப் பசியடக்கும்.

வேலிக்கு வைக்கும்
முருங்கைத்தடி
வயிற்றுக்கும் உணவாகும்.
தரமிக்க உணவு வேண்டி
மரவள்ளி தடி வைப்போம்.

தமிழீழம் எங்கும்
தரிசின்றி பயிர் செய்தால்
பல நாட்டின் பசியடங்கும்.

எங்களின் வளமும்
எங்களின் பலமுமே
தமிழீழம் மீட்கும்

இதை தமிழீழமெங்கும்
தங்கு தடையற்ற
தற்சார்பு விளைச்சலால் தழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் நிறுத்தத்தால்
தமிழீழமென்ன இருண்டா போகும்?
மெழுகுவர்த்தியாய் எரிந்த புலிகளின்
விடுதலை வெளிச்சம்
எம் பாதையைக் காட்டும்

புலிப்படை......
விடுதலை வேள்வியில்
உயிர்களை எரித்து
இயந்திரம் எல்லாம் இயக்கும்.

எமது மக்களின்
உரிமை வேட்கையே
மிகப்பெரும் எரிசக்தியாகும்
அதில்
ஆலைகள் வேகும்
வாகனம் போகும்
நாளை......
பகைவனுயிர் ஏகும்.

தமிழீழ விடுதலை
எட்டுகிற கனிதான்
அனைவர் கைகளும்
உயரட்டும்.

வாங்கிய விடுதலையை
வானத்தின் மீதிருந்து புலிகளோடு பார்ப்பேன்
என்று
நம்மீது நம்பிக்கை நாட்டிவிட்டுச் சென்றானே,
திலீபன்!
அவன் வாக்கை மறப்போமா?

நாடெல்லாம் தெருவெல்லாம் வீடெல்லாம்
வீட்டின் பானையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் பொருள் குவிந்திருக்க,
ஒருவாய் உணவைத்தான் உண்ணாமல்
சாகத்தான் துணிந்தானே,
சரித்திரமாய் மறைந்தானே.

அவன் போன பாதையை மறப்போமா?
சிங்களவன் கொடுக்காத பொருளாலே
விடுதலைதான் குறைவுபட்டுப் போய்விடுமா?

குடமெல்லாம், கிணறெல்லாம்......
குளமெல்லாம் நதியெல்லாம்......
நன்னீரால் நிறைந்திருக்க
ஒரு சொட்டுத் தண்ணீரும்
உள்ளே இறக்காமல்

அணுஅணுவாய் இறந்தானே!
கடல்வற்றி நிலமாகக் காய்ந்தாலும்
விடுதலையை வாங்கி அந்த வீரனுக்குக்
காட்டி விட்டுச் சாவோமே!

அவன் வயிற்றில் எரிந்த பசி நெருப்பே!
எங்கள் தேசத்தின் எரிபொருளாம்.
கையிருப்பு ஆயுதமாம்.

வெறும் கனவல்ல
விடுதலையை விரும்புகின்ற நாட்டிலெல்லாம்
நடப்பதைச் சொன்னான்.
மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!
மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!!
தமிழீழம் மலரட்டும்!
தமிழீழம் மலரட்டும்!!
புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெளியீடு:-

பிரச்சார வெளியீட்டு வாரியம்

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

800